**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 28/2021

நாள் : 28.01.2026

வா.சா.1 திரு.ராமமூர்த்தி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை (அனுமதியுடன்)**

தாவா சொத்தானது ராக்கப்பன் உடன் பிறந்தவர்கள் மற்றும் அவர்களது மூதாதையர்கள் வழிவந்த சொத்து ஆகும். தாவா சொத்து ராக்கப்பனின் மூதாதையர்கள் வழிசொத்து என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

பிராதில் ராக்கப்பனுக்கு பிறகு, அவரது சகோதரர்கள் ஒரு ஆவணத்தின் மூலம் ராக்கப்பனின் மனைவி பார்வதியம்மாளுக்கு எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் மூலம் அந்த சொத்து முழுமையாக பார்வதியம்மாளின் வசம் வந்துவிட்டது என்றால் சரிதான். அதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

நான் இந்த வழக்கின் பார்வதியம்மாள் தனது மகன் ரமணிக்கு எழுதுக்கொடுத்த விடுதலை பத்திரம் மட்டுமே போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. முனி என்ற ரமணி அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார். நான் ரமணியின் மகன். 2 முதல் 4 வரையிலான வாதிகள் எனது சகோதரர் ரவீந்திரனின் வாரிசுகள் என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி உமாமகேஸ்வரி தனது எதிர் வழக்குரையில் ரமணி உமாமகேஸ்வரியின் கணவர் ரகுநாதன் என்பவருக்கு உயில் எழுதி வைத்துள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் அது மோசடியாக தயார் செய்யப்பட்ட



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.28 13:08:50 +0530

ஆவணம். மேற்படி எதிர் வழக்குரைக்கு Rejoinder தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். Rejoinder எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

அந்த உயிலின் அடிப்படையில்தான் உமாமகேஸ்வரி தாவா சொத்தில் இருக்கிறார் என்றால் சரியல்ல. பிராதில் நானும் எனது சகோதரரும் சேர்ந்து ரூ.10,00,000/- செலவு செய்து முதல் தளத்தில் இரண்டு வீடுகள் கட்டியதாக சொல்லியுள்ளதை காண்பிக்க ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அது எந்த ஆவணம் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும். நான் தாக்கல் செய்துள்ள 19 ஆவணங்களில் அது போன்று எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

பிராதில் 20 வருடங்களாக ரகுநாதன் ராதிகா தையலகம் என்ற பெயரில் ஒரு டெய்லர் கடை நடத்தி வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு 20 வருடங்களாக அவர் கடை நடத்திவந்த நிலையில் ஏன் இதுநாள் வரை பாகம் கேட்கவில்லை என்றால் நான் என் பெற்றோரிடமும் என் சகோதரரிடமும் பலமுறை கேட்டேன், ஆனால் அவர்கள் பிரித்து கொடுக்கவில்லை. அது ரமணியின் தனிப்பட்ட சொத்து என்றாலும், அதனை உயில் மூலம் ரகுநாதனுக்கு எழுதிக்கொடுத்துவிட்டதாலும், அதனால்தான் நான் அந்த சொத்தில் பாகம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

பிராதில் எங்களுக்கு சொந்தமாக வீடு இல்லை என்றும், வாடகை வீட்டில் வசித்து வருகிறோம் என்றும், அதனால் பாகப்பிரிவினை கேட்கிறோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.10 புகைப்படத்தில் உள்ள வீடானது மதுரையில் உள்ள எனது வீடு என்றால் சரியல்ல. அதில் பார்வதி விலாஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.28 13:08:53 +0530

நான் வாடகை வீட்டில் குடியிருப்பதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2, 3 எனது தகப்பனார் பெயரில் வரி கட்டியதாக ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முந்தைய வரி ரசீதுகள் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அவை தொலைந்துவிட்டன. பி.சா.ஆ.11 ஆவணங்கள் 2021 முதல் 2024 வரையிலான வரி ரசீதுகள் என்றால் சரிதான். அவை 1ம் பிரதிவாதிக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் அது எனக்குத் தெரியாது. ரமணி இறந்ததற்கு பின்பு 1ம் பிரதிவாதிதான் மேற்படி சொத்திற்கு சொத்துவரி செலுத்தி வந்துள்ளார் என்றும், அந்த வரி விதிப்பு எண்ணை நான் எப்படியோ தெரிந்து கொண்டு, 2017-2018 ஆண்டிற்கான வரியை மட்டும் செலுத்தி ரசீது வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

5ம் பிரதிவாதி நாகேஸ்வரி சொத்தில் உரிமை ஏதேனும் கோரியுள்ளாரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது தகப்பனார் ரமணி ரகுநாதனுக்கு உயில் மூலம் சொத்தை எழுதி வைத்த விவரம் நாகேஸ்வரிக்கு தெரியும் என்றும், அதனால்தான் அவர் தாவா சொத்தில் பாகம் எதுவும் கோரவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

வா.சா.ஆ.19 ஆனது எனது தகப்பனார் தனது அலுவலகத்தில் தாக்கல் செய்த வாரிசுதாரர் நியமன படிவம் ஆகும். அந்த நியமன படிவத்தை பூர்த்தி செய்து யாரிடம் கொடுப்பார்கள் என்றால் அலுவலகத்தில் கொடுப்பார்கள். அந்த அலுவலகத்தில் தாக்கல் செய்த படிவம்தான் இதுவா என்றால் அலுவலகத்தில் தாக்கல் செய்துவிட்டு ஒரு நகலை என் அப்பா தன் பையில் வைத்திருந்தார். அது தான் இது. நான் சொல்வதை பார்த்தால் இரண்டு அசல் ஆவணங்கள் தயார் செய்து ஒன்றை அலுவலகத்திலும் மற்றொன்றை தன் பையில் வைத்திருந்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம்.

வா.சா.ஆ.19 படிவத்தில் R.Ramani என்று கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போன்று SB Pension Account என்றும்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.28 13:08:56 +0530

கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பக்கத்தில் வங்கி கணக்கு எண் மற்றும் நாமினியாக R.நாகேஸ்வரி என்ற பெயரும், அவரது விலாசமும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.19 படிவத்தில் இராமநாதபுரம் நீலநிற மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போன்று Deposit Column–ல் 2, 3, 4 என்று நீல மையினால் அவரது மகன்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 19.01.2007 என்ற தேதி மற்றும் கையொப்பம் என்ற இடத்தில் டார்க் புளு கலர் மையினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. புளு இங்க்தான். மேலே நீல நிற மையினால் எழுதப்பட்டுள்ள விவரங்களும், கீழே தேதி மற்றும் கையொப்பம் இடப்பட்டுளள நீல நிற மையும் நிற வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை. அதே போன்று, 2ம் சாட்சி ரெங்கநாதன் என்று போடப்பட்டுள்ள கையொப்பம் டார்க் புளு நிற மையினால் போடப்பட்டுள்ளது என்றும் , அதற்கும் மேலே சொல்லப்பட்டுள்ள நீல நிற மையிற்கும் நிற வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.19 படிவம் யார் வேண்டுமானாலும் வாங்கி பூர்த்தி செய்து கொள்ளலாம் என்றும், அவ்வாறு ஒரு படிவத்தை வாங்கி என் அப்பாவின் கையொப்பத்தை forgery ஆக போட்டு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் உயில் சாட்சியை விசாரித்து அவரும் இந்த உயில் பற்றி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் ஒருவர் மட்டும் சாட்சியம் அளித்துள்ளார். யாரும் நியமன படிவத்தை பூர்த்தி அசலை தன்னுடன் வைத்துக்கொள்ள மாட்டார்கள் என்றும், அதனை பூர்த்தி செய்து வங்கியில் கொடுத்துவிடுவார்கள் என்றும் சொல்வது சரியல்ல. வா.சா.ஆ.19 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாமினி அனைவரும் மேற்படி வங்கி கணக்கில் நியமனதாரர்களாக உள்ளார்களா என்றால் இருக்கிறார்கள். மேற்படி



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.28 13:08:59 +0530

நியமனதாரர்களின் விவரங்களுடன் மேற்படி வங்கியின் கணக்கின் விவரங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு எந்த நியமனமும் இல்லை என்பதால்தான், அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

எனது தந்தை ஏற்கனவே ரகுநாதனுக்கு உயில் எழுதிக்கொடுத்து விட்டதால் தாவா சொத்தில் நாங்கள் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. என் சகோதரர் ரவீந்திரநாதனுக்கும் இந்த உயில் பற்றிய விவரம் தெரியும் என்றும், அவர் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகள் எனது தூண்டுதல் பேரில் என்னுடன் சேர்ந்து வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.28 13:09:03 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .